ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

05.12.2024

1. அத்தனாய் ஆசானாய் அனைத்துமாய்
அரங்கன் யான் என் மக்களை
இத்தரையில் காத்து அருள்புரிய
இன்னும் ஏன் கலக்கம் தயக்கமென

2. தயக்கமென தேற்றியே அரங்கமகானும்
தக்கநல் குரோதி தேள் திங்களில்
நேயமுள்ள சூலவாம் குருவார அருளாசி
நூல் வழி உங்களுக்கு பேசிடுவேன்

3. பேசிட பிரச்சினை சுமைகள் என்பது
பின் தொடரும் கருமா தானப்பா
ஆசி தந்து யானே மீட்க இருக்க
அழுகையும் சோர்வும் ஏனப்பா உங்களுக்கு

4. உங்களை சோதி சூட்சுமமாக
உள்ளும் புறமுமாக யானே
அங்க அவயம் எண்ணம் யாவுமாக
ஆற்றல்பட காத்து மீட்டு வர

5. வருகவே இன்னும் சரணாகதி
வரவில்லையா என் மக்களே
தருகின்றேன் கவலை வேண்டாம்
தவபலத்தின் என் சக்தி தன்னை

6. தன்னையே உங்கள் தேவைகள்
தடைபடா பூர்த்தி ஆகும்படி
அன்னதான சேவைகள் வளரும்படி
அள்ளித் தருகிறேன் அளவிலா கொடையை

7. கொடையாக கேட்கும் இடமெல்லாம்
கொடுக்கச் செய்கிறேன் தாராளமாக
தடையின்றி அருள் பொருள் வளம்
தனித்துவம் கண்டிடவும் அருள்வேன்

8. அருளவே பிரணவக் குடில் நோக்கி
அவசியம் மாதாந்திர வாராந்திர
குருவாரம் முழுமதி பூசைகளென
கூடியே என் மக்கள் வணங்கி

9. வணங்கி தருமத்தில் உதவி
வரம் தா எனத் தொடர்ந்து
இணங்கி பூசைகள் செய்ய
என் குடில் அருளமுது உண்டுவர

10. வருபவரெல்லாம் ஞானிகள் ஆக
வரம் தந்தேன் அரங்கனும்
குருமார்க்கம் சூட்சுமம் அறிந்து
குறைவிலா சன்மார்க்கம் தன்னை

11. தன்னை ஏற்று உலகெலாம் பரப்ப
தவராஜன் என் கிளைகள் யாவும்
மண்ணுலகை மாற்றுவது உறுதி
மகான் அரங்கன் யான் மொழிந்த
குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி